17 MAR 1967
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 7th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : All the Questions relating to the Hon. the Chief Minister and the Hon. the Minister for Co-operation are postponed as they are held up elsewhere.

North-East Monsoon

* 401 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state the respective extent of benefit got and damage suffered by standing crops in the eastern coastal areas of the State due to the North-East Monsoonal downpour of rains?

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] is placed on the Table of the House.

Drought

* 402 *Q.*—SRI V. SANKARAN : } SRI P. MURUGAIYAN : } Will the Hon. the Minister for Food be pleased to state the taluks in the State affected seriously by drought conditions and the steps and measures the Government have proposed to take to afford redress and relief to the people affected thereby?

THE HON. SRI V. RAMAIAH : A statement is placed on the Table of the House.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த மழையின்மையினால் எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தத் தாலுகாவில் வறட்சி ஏற்பட்டது? அவைகளை எந்த முறையில் ஆராய்ந்து சர்க்கார் நடவடிக்கை எடுத்தார்கள்?

கனம் திரு. வெ. ராமையா : எந்த முறையில் வறட்சி ஏற்பட்டது என்பதை ஆராய்வதற்கில்லை. எங்கெங்கே வறட்சி ஏற்பட்டதோ அங்கே நிவாரணம் அனுமதித்ததைப்பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

---

a Printed as Appendix I on pages 537–539.
b Printed as Appendix II on pages 539–545.

[7th November 1966

திரு. சோ. ஆறுமுகம் : வறட்சி அல்லது பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கு சர்க்காருடைய • தவ எநத அளவிற்குச் செய்யப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அறிக்கையைப் பார்த்தால் தெரியும். அதில் எல்லாம் இருக்கிறது.

Kist remission

* 403 Q.—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether kist remission is given to farmers and land holders in 1966 in Thanjavur, Tiruchirappalli and Tirunelveli districts owing to failure of monsoon and drought; and

(b) if so, the details thereof, talukwar?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. கோ. சி. மணி : இந்த அறிக்கை வெளியிட்ட பிறகு இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சமாளிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : அறிக்கை தயாரித்து முடிவடைந்த பிறகுதான் என்னென்ன நிவாரணம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இனி மேல் ஒன்றும் இல்லை. அடுத்த பசலியில் ஏதாவது இருக்கலாம். ஆனால், அப்படி இருக்காது என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

திரு. ஆ. கு. சுப்பையா : அரசாங்கத்தினுடைய உத்தரவு வந்த பிறகும் கூட விவசாயிகளிடமிருந்து வசூலித்திருக்கிறார்கள். அப்படி வசூல் செய்த தொகையை 76-வது பசலியில் ஈடு செய் வதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அவ்வாறு என்னிடத்தில் தகவல் இல்லை. தனிப்பட்ட முறையில் எழுதி அனுப்பினால் தெரிவிக் கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கிஸ்தி வஜா செய்வதில் இரண்டு போக நிலத்தைப் பார்த்தால் குறிப்பிட்ட வசூலுக்காக உள்ள இரண்டு போகமும் விளையாமல் இருந்தால் வஜா வழங்கலாம் என்றிருக்கிறது. முந்தைய பசலியின் கடைசி போகமும் வருகிற பசலியின் முதல் போகமும் சேர்ந்து இரண்டு போகமும் விளையா மல் இருந்தாலும்கூட வரி வஜா செய்யப்படுகிறதா ? அப்படிச் சேர்ந்து வந்து அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அதற்கும் வஜா செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

---

[a] Printed as Appendix III on pages 545–546.